## திராவிட இயக்க இதழ்கள் - ரிவோல்ட்



பகுத்தறிவுச் சிந்தனைகளை, சுய மரியாதைக் கொள்கைகளை தமிழ்நாட்டுடன் நின்றுவிடாமல், வெளிமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் பரவலாகக் கொண்டு செல்வதற்கு தந்தை பெரியார் பயன்படுத்திய எழுத்தாயுதம், ‘ரிவோல்ட்’. தமிழில் வெளிவந்த ‘குடிஅரசு’ இதழின் ஆங்கில முகம் என்று ‘ரிவோல்ட்’ பத்திரிகையைச் சொல்லலாம்.

பெரியாரும், அவரது தோழர் எஸ்.இராமநாதனும் ஆசிரியர்களாக இருந்து நடத்திய இந்த இதழ், வார இதழாக வெளிவந்தது. இதழின் பதிப்பாளர் மற்றும் வெளியீட்டாளராக நாகம்மையார் இருந்தார். 1928-ஆம் ஆண்டு நவம்பர் 7-ஆம் தேதியிட்ட இதன் முதல் இதழ், 6-ஆம் தேதி அன்று வெளியிடப்பட்டது. இந்த இதழ் குறித்து, ‘குடிஅரசு’வில் பெரியார் எழுதும்போது, இப்படிச் சொல்கிறார்:

“ ‘ரிவோல்ட்’ என்ற ஆங்கில வாரப் பத்திரிகை நடத்துவதின் கருத்து, இப்போது நாம் பதிப்பாசிரியராயிருந்து நடத்தும் ‘குடிஅரசு’ என்னும் தமிழ் வாரப் பத்திரிகையின் கொள்கைகளையே முக்கியமாய்க் கொண்டு நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்படுகிறது.‘ரிவோல்ட்’ என்கின்ற வார்த்தைக்கு நாம் எடுத்துக் கொண்ட அர்த்தம், ‘கட்டுப்பாட்டை உடைத்தல்’ என்பது. அதாவது மனித தர்மத்துக்கும், மனித இயற்கைக்கும் விரோதமாக அரசியலிலானாலும் சரி, மத இயலிலானாலும் சரி, அதிகார இயலிலானாலும் சரி, முதலாளித்துவ இயலிலானாலும் சரி, ஆண் இயலிலானாலும் சரி மற்றும் எவைகளிலானாலும் சரி அவைகளினால் ஏற்படும் இயற்கைக்கும் அறிவுக்கும் மாறுபட்ட கட்டுப்பாடுகளை உடைத்து, உலகமும் அதன் இன்பமும் எல்லோருக்கும் பொது என்பதும் மக்கள் யாவரும் சமம் என்பதுமான கொள்கையை மனசாட்சிப்படி சாத்தியமான வழிகளில் பிரச்சாரம் செய்வதே அதன் நோக்கம் என்பதாகும்” எனக் குறிப்பிட்டார்.

## :ப்ளாஷ்பேக்





பஞ்சு. அரவிந்தன்

### ‘தளபதி’ தோப்பு!

1989-ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்துக்கு கழக நிகழ்ச்சிகளுக்காக அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்திருந்தார்கள். அப்போது ஈரோடு காளிங்கராயன்பாளையம், அணைத்தோப்புப் பகுதியில், அன்றைய ஒன்றியச் செயலாளர் தோப்பு.துரைசாமி அவர்களின் இல்லத்தில் தளபதியார் தங்கியிருந்தார். அப்போது நானும், இன்றைய ஈரோடு ஒன்றியச் செயலாளர் தோப்பு துரை.சதாசிவம் அவர்களும் சென்று சந்தித்து, புகைப்படம் எடுத்துக் கொண்டோம்.

**- பஞ்சு.அரவிந்தன், தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர், ஈரோடு மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### ‘சர்க்காரை எதிர்த்து நிற்போம்!’

1949-ஆம் ஆண்டு செப்டம்பரில், கழகம் தொடங்குவதற்கான ஆலோசனைகளின் போது, பெரியாருடன் முரண்பட்ட தோழர்கள் பல கருத்துகளைக் தெரிவித்தனர். அண்ணா வெளியிட்ட அறிக்கையில், “திராவிடர் கழகத்தைக் கைப்பற்றுவது, நமக்குச் சாத்தியமே. அதற்குரிய வலிவும், நியாயமும் நம்மிடமுண்டு. எனினும், அதைச் செய்தால் நாட்டில் நாசமே நிகழும். பாசிசமும் பழைமையும் அதைச் சாதகமாக்கும் என அந்த யோசனைகளை மறுத்தார். அன்று நடைபெற்ற கழகத் துவக்க விழாவில், அண்ணா உரையாற்றினார். “பேச்சு, எழுத்துரிமைக்கான அடக்குமுறைகளை தி.மு.க. எதிர்க்க வேண்டும். பெரியார் தந்த பயிற்சியும் பக்குவமும் நாம் சர்க்காரை எதிர்த்துச் சிறையேகத் துணையாகட்டும்.” என அறிவித்தார்.

## முதன் முதலில் 24

**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...**



# முழக்கமிடு உடன்பிறப்பே!

*அரசியல் கட்சிகளின் கொள்கை முழக்கம், மேடைகளிலேயும் தெருக்களிலேயும் விண் அதிர ஒலிக்கப்படும்போதுதான் அந்த கட்சிகள் எதை இலக்காகக் கொண்டுள்ளன என்பது புரியும். அப்படியான முழக்கத்தை தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில், முதன்முதலில் ஒலிக்கச் செய்த மரபு, திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத்தான் உண்டு. அதுவும் ஒன்றல்ல... ஐம்பெரும் முழக்கங்கள்..!*

*1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 10 அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த ஓராண்டு நிறைவு பெற்றது. தொடர்ந்து 19- ஆம் தேதி, திருச்சியில் தி.மு.க. மாவட்ட மாநாடு எழுச்சியுடன் நடைபெற்றது. சி.பி.சிற்றரசு தலைமையில், நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன் தொடங்கிவைத்தார். அந்த மாநாட்டில், பஞ்சாப்பின் அன்றைய முதல்வர் குர்ணாம்சிங், புதுவையில் தி.மு.க. முதல்வர் ஃபாரூக் ஆகியோர் பங்கேற்றனர்.*

**“1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் நாள் திருச்சியில் எழுப்பப்பட்ட அந்த ஐம்பெரும் முழக்கம்தான், இன்றைக்கும் தி.மு.கழகத்தின் இதய கீதமாக இருந்து நம்மையெல்லாம் இயக்கி வருகிறது..!”**

*2014-ஆம் ஆண்டு பிப்ரவரி 15, 16 தேதிகளில் திருச்சியில் தி.மு.க. மாநில மாநாடு நடைபெற்றது. அப்போது, 1970-ஆம் ஆண்டு திருச்சி மாவட்ட மாநாட்டைக் குறித்து, ‘முரசொலி’யில் கலைஞர் அவர்கள் எழுதினார். அதில் இப்படிக் கூறுகிறார்:*

*“அந்த மாவட்ட மாநாட்டின் ஊர்வலச் சிறப்பு குறித்து ‘முரசொலி’யில் அப்போது தம்பி முரசொலி மாறன் அருமையானதொரு சொல்லோவியத்தையே தீட்டியிருந்தார். அதில் ஒரு சிறு பகுதியை மட்டும் - அது சாலப் பொருத்தம் என்பதால், இப்போது நினைவுபடுத்துகிறேன். “ஒரு மாநில மாநாட்டை நடத்திவிட்டு மாவட்ட மாநாடு என்று அன்பிலார் பொய் கூறிவிட்டார். திருச்சி மாநாடு பல விதங்களில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது. அண்ணாவிற்குப் பிறகு, கழக வரலாற்றில் இந்த மாநாடு ஒரு குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியாகும். சொற்பொழிவு - நாடகம் - கலைநிகழ்ச்சி - பத்திரிகை - சுவரொட்டி ஆகியவற்றை பலமான பிரச்சார ஆயுதங்களாக தி.மு. கழகம் பயன்படுத்தி வருவது போல, உலகத்தில் எந்த அரசியல் கட்சியும் பயன்படுத்துவதில்லை என்று நமது இயக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி நடத்தும் ஒரு அமெரிக்க மாணவர் என்னிடம் (முரசொலி மாறனிடம்) குறிப்பிட்டார். அந்தப் பட்டியலிலே நாம் ஊர்வலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்று தொடங்கும் முரசொலி மாறனின் அந்தக் கட்டுரையில் கழகத்தின் சார்பில், நடைபெற்ற பல்வேறு ஊர்வலங்களின் பெருமைகளையெல்லாம் தொகுத்திருப்பார்!”*

*அந்த மாநாட்டில்தான், “1) அண்ணா வழியில் அயராது உழைப்போம்!; 2) ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்; 3) இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்; 4) வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்; 5) மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி!” என்ற ஐம்பெரும் முழக்கங்களைத் தந்தார் கலைஞர்.*

*1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் நாள் திருச்சியில் எழுப்பப்பட்ட அந்த ஐம்பெரும் முழக்கம்தான், இன்றைக்கும் தி.மு.கழகத்தின் இதய கீதமாக இருந்து நம்மையெல்லாம் இயக்கி வருகிறது..!*

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 24

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# மாறனின் முழக்கம்!

*திராவிட இயக்கம் போன்ற அறிவியக்கத்தின் போக்கில், சில ஆளுமைகளின் இழப்பு என்பது, ஈடு செய்யமுடியாத ஒன்றாகும். அந்த வெளியை, நிரப்ப மற்றுமொரு ஆளுமை கிடைப்பது அரிதினும் அரிது. திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அத்தகைய பேரிழப்பாகக் கருதும் சிலரில் ‘முரசொலி’ மாறன் அவர்கள் முக்கியமானவர். கலைஞரின் மனசாட்சியாகப் போற்றப்பட்ட முரசொலி மாறன் அவர்கள் தன்னுடைய 69-வது வயதில் இயற்கை எய்தினார்.*

**“அவர் வாழ்ந்த காலத்தில் இயக்கத்துக்குத் தன்னாலான அறிவுசார் பங்களிப்பைக் கொடுத்துள்ளார் என்பதுதான், அவர் வாழ்க்கையிலிருந்து நாம் அனைவரும் கற்க வேண்டிய பாடம்.”**

*அவரின் மறைவு முத்தமிழறிஞர் கலைஞருக்கும், கழகத்துக்கும் பேரிழப்பாக இருந்தது என்பதை நாம் அறிவோம்.*

*முரசொலி மாறன் அவர்களின் இயக்கப் பணி, கொள்கைப் பணி, ஊடக மற்றும் கலைப் பணி, ஆகியவற்றை உள்ளடக்கிய ‘முரசொலி மாறன்’ என்ற சிறு நூலை திராவிட இயக்க வரலாற்றாசிரியர் க. திருநாவுக்கரசு அவர்கள் எழுதி இருக்கிறார். நக்கீரன் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.*

*கலைஞரை முன்னோடியாகக் கொண்டு சிறுவயது முதலே இயக்கத்துக்காகப் பணியாற்றத் தொடங்கியவர், முரசொலி மாறன். தி.மு. கழகத்தின் கொள்கைப் பாசறையைச் செதுக்கியதில் மாறனுக்குப் பெரும்பங்குண்டு. பல்வேறு திரைப்படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார். முரசொலியில் ஆசிரியராகப் பல ஆண்டு காலம் தீவிரமாக இயங்கியுள்ளார்.*

*1967-இல் அண்ணா நின்று வெற்றிபெற்ற தென்சென்னை மக்களவைத் தொகுதிக்கு (அண்ணா முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு), நடைபெற்ற இடைத்தேர்தலில் நின்று வென்றவர் மாறன். அந்தத் தேர்தல் பிரச்சாரத்தின் போது அண்ணா இவ்வாறு கூறியிருப்பார் “மாறனைப் பார்க்கிற போது டெல்லியில் உள்ளவர்களுக்கு மாறன் தெரிய மாட்டார்-என் நினைவுதான் வரும்”. அண்ணாவின் இந்த நம்பிக்கையைக் கிட்டத்தட்ட 30 ஆண்டு காலம் மாறன் காப்பாற்றினார்.*

*தோஹா மாநாட்டில் (DOHA CONFERENCE) அவர் ஆற்றிய அந்த உரையிலும், அதன் மூலம் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலமும்தான் இன்று வரை வளரும் நாடுகளில் வர்த்தகத் துறை நிலையான ஒன்றாக இருந்து வருகிறது.*

*‘முரசொலி’யில் அவர் தீட்டிய கட்டுரைகளும், ‘திராவிட இயக்க வரலாறு’, ‘மாநில சுயாட்சி’, ‘ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?’ போன்ற கருத்துச் செறிவு கொண்ட புத்தகங்களும் கழகத்துக்கு அவர் அளித்துச் சென்ற கொள்கைக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. அவர் வாழ்ந்த காலத்தில் இயக்கத்துக்குத் தன்னாலான அறிவுசார் பங்களிப்பைக் கொடுத்துள்ளார் என்பதுதான், அவர் வாழ்க்கையிலிருந்து நாம் அனைவரும் கற்க வேண்டிய பாடம்.*





*இந்தத் தகவல்களை எல்லாம் சுருக்கமாகவும் செறிவாகவும் அளிக்கிறது, இந்தப் புத்தகம். திராவிட இயக்க ஆர்வலர்கள் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகம். இந்நூலில் பின்னிணைப்பாக மாறன் அவர்கள் எழுதிய ‘இந்தி என்றால் என்ன?’ என்ற ஆய்வுக் கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.*

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

568

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131